No. of Printed Pages : **32**

4757

A

பதிவு எண்
Register Number

PART - III

கணக்குப்பதிவியல் / ACCOUNTANCY

(தமிழ் மற்றும் ஆங்கில வழி / Tamil & English Version)

கால அளவு : 3.00 மணி நேரம்] [மொத்த மதிப்பெண்கள் : 90
Time Allowed : 3.00 Hours] [Maximum Marks : 90

அறிவுரைகள் : (1) அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.

Padasalai.Net

Instructions : (1) Check the question paper for fairness of printing. If there is any lack of fairness, inform the Hall Supervisor immediately.

(2) Use **Blue** or **Black** ink to write and underline and pencil to draw diagrams.

பகுதி - I/PART - I

குறிப்பு : (i) **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **20x1=20**

(ii) கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

Note : (i) Answer **all** the questions.

(ii) Choose the most appropriate answer from the given four alternatives and write the option code and the corresponding answer.

1. **சரியற்ற** இணையினை அடையாளம் காணவும்.

(அ) ஆண்டுத் தொகை முறையில் நற்பெயர் - சராசரி இலாபம் × ஆண்டுத்தொகை காரணியின் தற்போதைய மதிப்பு

(ஆ) சராசரி இலாப முறையில் நற்பெயர் - சராசரி இலாபம் × கொள்முதல் ஆண்டுகளின் எண்ணிக்கை

(இ) கூட்டு சராசரி இலாப முறையில் நற்பெயர் - கூட்டுசராசரி இலாபம் × கொள்முதல் ஆண்டுகளின் எண்ணிக்கை

(ஈ) உயர் இலாப முறையில் நற்பெயர் - உயர் இலாபம் × கொள்முதல் ஆண்டுகளின் எண்ணிக்கை

Identify the **incorrect** pair.

(a) Goodwill under Annuity Method - Average Profit × Present value annuity factor

(b) Goodwill under Average Profit Method - Average Profit × Number of years of purchase

(c) Goodwill under Weighted Average Profit Method - Weighted Average Profit × Number of years of purchase

(d) Goodwill under Super Profit Method - Super Profit × Number of years of purchase

Padasalai.Net

2. பாலாஜி மற்றும் கமலேஷ் என்னும் கூட்டாளிகள் இலாப நட்டங்களை 2 : 1 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொண்டனர். அவர்கள் யோகேஷ் என்பவரை கூட்டாண்மையில் சேர்த்துக் கொண்டனர். பாலாஜி, கமலேஷ் மற்றும் யோகேஷின் புதிய இலாபப் பகிர்வு விகிதம் 3 : 1 : 1. பாலாஜி மற்றும் கமலேஷின் தியாக விகிதத்தைக் கணக்கிடவும்.

(அ) 2 : 1 (ஆ) 1 : 3 (இ) 1 : 2 (ஈ) 3 : 1

Balaji and Kamalesh are partners sharing profit and losses in the ratio of 2 : 1. They admit Yogesh into partnership. The new profit sharing ratio between Balaji, Kamalesh and Yogesh is agreed to 3 : 1 : 1. Find the sacrificing ratio between Balaji and Kamalesh.

(a) 2 : 1 (b) 1 : 3 (c) 1 : 2 (d) 3 : 1

3. முன்னுரிமைப் பங்கு என்பது :

(i) நிலையான விகிதத்தில் பங்காதாயம் பெறுவதற்கான முன்னுரிமையைப் பெற்ற பங்கு.

(ii) கலைப்பின் போது பங்கு முதலை திரும்பப் பெறுவதற்கான முன்னுரிமையைப் பெற்ற பங்கு.

(அ) (i) மற்றும் (ii) சரியானது

(ஆ) (i) மட்டும் சரியானது

(இ) (i) மற்றும் (ii) தவறானவை

(ஈ) (ii) மட்டும் சரியானது

A preference share is one :

(i) Which carries preferential right with respect to payment of dividend at fixed rate.

(ii) Which carries preferential right with respect to repayment of capital on winding up.

(a) Both (i) and (ii) are correct

(b) Only (i) is correct

(c) Both (i) and (ii) are incorrect

(d) Only (ii) is correct

Padasalai.Net

4. முழுமைபெறா பதிவேடுகளின் குறைபாடுகள் தொடர்பான பின்வரும் எந்த கூற்று **தவறானது** ?

(அ) பதிவேடுகள் முறையாகப் பராமரிக்கப்படாமை.

(ஆ) இருப்பாய்வு தயாரிப்பது கடினம்.

(இ) தவறுகள் மற்றும் மோசடிகளை எளிதாகக் கண்டறிய முடியும்.

(ஈ) வியாபாரத்தின் நிதிநிலையைக் கண்டறிதல் கடினம்.

Which one of the following is **incorrect** regarding the limitations of incomplete records ?

(a) Lack of proper maintenance of records.

(b) Difficulty in preparing trial balance.

(c) Errors and frauds can be detected easily.

(d) Difficulty in ascertaining financial position.

5. பயனரின் தேவைக்கேற்ப தயாரிக்கப்படும் கணக்கியல் அறிக்கையானது :

(அ) இருப்பாய்வு

(ஆ) வழக்கமான கணக்கியல் அறிக்கை

(இ) இருப்புநிலைக் குறிப்பு

(ஈ) குறிப்பிட்ட நோக்க அறிக்கை

Accounting report prepared according to the requirements of the user is :

(a) Trial Balance

(b) Routine accounting report

(c) Balance Sheet

(d) Special purpose report

6. கூட்டாளிகளிடமிருந்து நிறுவனம் கடன்கள் பெற்றிருந்தால், அக்கடன்களுக்கு இந்திய கூட்டாண்மைச் சட்டம், 1932 -ன் படி வழங்கப்படும் வட்டி வீதம் :

(அ) ஆண்டுக்கு 5% (ஆ) ஆண்டுக்கு 8%

(இ) ஆண்டுக்கு 6% (ஈ) ஆண்டுக்கு 12%

Padasalai.Net

As per the Indian Partnership Act, 1932 the rate of interest allowed on loans advanced by partners is :

(a) 5% per annum (b) 8% per annum

(c) 6% per annum (d) 12% per annum

7. புற–அக பொறுப்புகள் அளவிடுவது :

(அ) இலாபம் ஈட்டும் திறன்

(ஆ) குறுகியகாலக் கடன் தீர்க்கும் திறன்

(இ) செயல் திறன்

(ஈ) நீண்டகாலக் கடன் தீர்க்கும் திறன்

Debt equity ratio is a measure of :

(a) Profitability

(b) Short-term Solvency

(c) Efficiency

(d) Long-term Solvency

8. ஒரு நிறுமத்தின் நீர்மைத் தன்மையை சோதிக்க கீழ்க்கண்ட எந்த விகிதங்கள் பயன்படுகிறது ?

(i) விரைவு விகிதம் (ii) நிகர இலாப விகிதம்

(iii) புற-அக பொறுப்புகள் விகிதம் (iv) நடப்பு விகிதம்

(அ) (i) மற்றும் (iii) (ஆ) (i) மற்றும் (ii)

(இ) (ii) மற்றும் (iv) (ஈ) (i) மற்றும் (iv)

To test the liquidity of a concern, which of the following ratios are useful ?

(i) Quick ratio (ii) Net profit ratio

(iii) Debt equity ratio (iv) Current ratio

(a) (i) & (iii) (b) (i) & (ii)

(c) (ii) & (iv) (d) (i) & (iv)

Padasalai.Net

9. கூட்டாண்மை நிறுவனத்திலிருந்து கூட்டாளி விலகலின்போது பகிர்ந்து தரா இலாபங்கள் மற்றும் நட்டங்கள் கூட்டாளிகளுக்கு _____ அடிப்படையில் பகிரப்படுகிறது.

(அ) ஆதாய விகிதம்

(ஆ) புதிய இலாபப் பகிர்வு விகிதம்

(இ) தியாக விகிதம்

(ஈ) பழைய இலாபப் பகிர்வு விகிதம்

On retirement of a partner from a partnership firm, accumulated profits and losses are distributed to the partners in the :

(a) Gaining ratio

(b) New profit sharing ratio

(c) Sacrificing ratio

(d) Old profit sharing ratio

10. பின்வரும் வாக்கியங்களில் **எது சரியானதல்ல ?**

(அ) போக்குப் பகுப்பாய்வு என்பது ஓராண்டில் தொகைகளில் ஏற்படும் மாற்றங்களை ஆய்வு செய்தலைக் குறிப்பதாகும்.

(ஆ) குறிப்புகள் மற்றும் பட்டியல்களும் நிதிநிலை அறிக்கைகளின் பகுதி ஆகின்றன.

(இ) பொது அளவு அறிக்கை சில பொது அடிப்படைகளைக் கொண்டு பல்வேறு இனங்களின் தொடர்பினைக் காட்டுவதாகும். இவ்வினங்கள் பொது அளவு அடிப்படையின் சதவிகிதமாக காட்டப்படுகின்றன.

(ஈ) நிதிநிலை அறிக்கை பகுப்பாய்வின் கருவிகளில் பொது அளவு அறிக்கை உள்ளடங்கும்.

Which of the following statements is **not true** ?

(a) Trend analysis refers to the study of movement of figures for one year.

(b) Notes and schedules also form part of financial statements.

Padasalai Net

(c) The common-size statements show the relationship of various items with some common base, expressed as percentage of the common base.

(d) The tools of financial statement analysis include common-size statement.

11. எடுப்பு மீது வட்டி, முதல் மீது வட்டி மற்றும் ஊதியம் கழித்தபின் உள்ள இலாபம் ₹ 10,500. சங்கீதா என்ற கூட்டாளி கழிவுக்குப்பின் உள்ள நிகர இலாபத்தில் 5% கழிவு பெற உரியவராயின், கழிவுத் தொகையை கண்டறியவும்.

(அ) ₹ 550 (ஆ) ₹ 50 (இ) ₹ 500 (ஈ) ₹ 150

Profit after interest on drawings, interest on capital and remuneration is ₹ 10,500. Sangeetha, a partner is entitled to receive commission at 5% on profits after charging such commission. Find out the commission.

(a) ₹ 550 (b) ₹ 50 (c) ₹ 500 (d) ₹ 150

A

12. ஒரு கூட்டாளி விலகலின்போது ஆதாய விகிதத்தின் நிர்ணயம் எதற்கு தேவைப்படுகிறது ?

(அ) பகிர்ந்து தரா இலாபங்கள் மற்றும் நட்டங்களை பகிர்ந்தளிப்பதற்கு

(ஆ) நற்பெயரை சரிக்கட்டுவதற்கு

(இ) மறுமதிப்பீட்டு இலாபம் அல்லது நட்டம் மாற்றப்படுவதற்கு

(ஈ) மேற்கண்ட எதுவுமில்லை

At the time of retirement of a partner, determination of gaining ratio is required :

(a) To distribute accumulated profits and losses

(b) To adjust goodwill

(c) To transfer revaluation profit or loss

(d) None of these

Padasalai.Net

13. நிதி என்னும் சொல் குறிப்பிடுவது :

(அ) நிலைச் சொத்துகள்

(ஆ) நடப்புப் பொறுப்புகள்

(இ) நீண்டகாலச் சொத்துகள்

(ஈ) நடைமுறை முதல்

The term 'fund' refers to :

(a) Fixed assets

(b) Current liabilities

(c) Non-current assets

(d) Working capital

14. சரக்கிருப்பு மற்றும் முன்கூட்டிச் செலுத்திய செலவுகள் நீங்கலாக உள்ள நடப்புச் சொத்துக்கள் _____ என அழைக்கப்படுகிறது.

(அ) நிதி (ஆ) காப்புகள்

(இ) விரைவுச்/நீர்மைச் சொத்துகள் (ஈ) புலனாகும் சொத்துகள்

Current assets excluding inventory and prepaid expenses is called _____.

(a) Funds (b) Reserves

(c) Quick/Liquid assets (d) Tangible assets

15. முழுமைபெறா பதிவேடுகளை பொதுவாக பராமரித்து வருவது :

(அ) சிறிய அளவிலான **தனிஆள்** வணிகம்

(ஆ) நிறுமம்

(இ) பன்னாட்டு நிறுவனங்கள்

(ஈ) அரசு

Incomplete records are generally maintained by :

(a) Small sized sole trader business

(b) A company

(c) Multinational enterprises

(d) Government

Padasalai.Net

16. பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கு ஒரு :

(அ) ஆள்சார் கணக்கு

(ஆ) பெயரளவு கணக்கு

(இ) பிரதிநிதித்துவ ஆள்சார் கணக்கு

(ஈ) சொத்து கணக்கு

Receipts and payments account is a :

(a) Personal Account

(b) Nominal Account

(c) Representative Personal Account

(d) Real Account

17. ஒரு பொது அளவு இருப்பு நிலைக் குறிப்பில், நீண்டகாலச் சொத்துகளின் சதவீதம் 75 எனில் நடப்பு சொத்துகளின் சதவீதம் எவ்வளவு ?

(அ) 25 (ஆ) 175 (இ) 100 (ஈ) 125

In a common size balance sheet, if the percentage of non-current assets is 75, what would be the percentage of current assets ?

(a) 25 (b) 175 (c) 100 (d) 125

18. எதிர்ப்பதிவு சான்றாவணம் எதற்கு பயன்படுத்தப்படுகிறது ?

(அ) அறிக்கைகள்

(ஆ) தலைமைப் பதிவு

(இ) சொத்துகள் கடனுக்கு வாங்கியது

(ஈ) அலுவலக பயன்பாட்டிற்காக வங்கியில் இருந்து எடுத்த ரொக்கம்

Contra voucher is used for :

(a) Reports

(b) Master entry

(c) Credit purchase of assets

(d) Withdrawal of cash from bank for office use

Padasalai.Net

19. உயர் இலாபம் பின்வரும் இரண்டிற்கும் இடையேயான வேறுபாடாகும்.

(அ) சராசரி இலாபம் மற்றும் சாதாரண இலாபம்

(ஆ) பயன்படுத்தப்பட்ட முதல் மற்றும் சராசரி இலாபம்

(இ) நடப்பு ஆண்டின் இலாபம் மற்றும் சராசரி இலாபம்

(ஈ) சொத்துகள் மற்றும் பொறுப்புகள்

Super profit is the difference between :

(a) Average profit and normal profit

(b) Capital employed and average profit

(c) Current year's profit and average profit

(d) Assets and liabilities

20. வருவாய் மற்றும் செலவினக் கணக்கு தயாரிக்கப்படுவதன் மூலம் கண்டறியப்படுவது :

(அ) உபரி அல்லது பற்றாக்குறை (ஆ) இலாபம் அல்லது நட்டம்

(இ) நிதி நிலை (ஈ) ரொக்கம் மற்றும் வங்கி இருப்பு

Income and Expenditure Account is prepared to find out :

(a) Surplus or deficit (b) Profit or Loss

(c) Financial position (d) Cash and bank balance

பகுதி - II/PART - II

குறிப்பு : எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் **30** -க்கு **கட்டாயமாக** விடையளிக்கவும். **7x2=14**

Note : Answer **any seven** questions. Question No. **30** is **compulsory**.

Padasalai.Net

21. இலாப நோக்கற்ற அமைப்பின் பொருள் தரவும்.

State the meaning of not-for-profit organisation.

22. கூட்டாளி ஒருவருக்கு முதல் மீது வட்டி அனுமதிக்க மேற்கொள்ள வேண்டிய குறிப்பேட்டுப் பதிவு என்ன ?

What is the Journal entry to be passed for providing interest on capital to a partner ?

23. குமார் என்ற கூட்டாளி 2018, ஏப்ரல் 1 அன்று ₹ 20,000 எடுத்துக் கொண்டார். எடுப்புகள் மீது வட்டி ஆண்டுக்கு 10% என கணக்கிடப்பட வேண்டும். 2018, டிசம்பர் 31 அன்று எடுப்புகள் மீது வட்டி கணக்கிடவும்.

Kumar is a partner who withdrew ₹ 20,000 on 1st April 2018. Interest on drawing is charged at 10% per annum. Calculate interest on drawings on 31st December 2018.

24. கூட்டாண்மை நிறுவனத்தில் நற்பெயரை மதிப்பிடும் நான்கு சூழ்நிலைகளைத் தரவும்.

State the four circumstances under which goodwill of a partnership firm is valued.

25. அனு மற்றும் அருள் எனும் கூட்டாளிகள் முறையே 3 : 2 எனும் விகிதத்தில் இலாப நட்டங்களை பகிர்ந்து வந்தனர். 31.03.2017 அன்று மாலதி என்பவரை கூட்டாளியாக சேர்த்தனர். அவர் சேர்ந்த நாளில் நிறுவன ஏடுகளில் காப்பு நிதி ₹ 50,000 எனக் காட்டியது. காப்பு நிதியை பகிர்ந்தளிக்க குறிப்பேட்டுப் பதிவு தரவும்.

Anu and Arul were partners sharing profits and losses in the ratio of 3 : 2. On 31.03.2017 Malathi was admitted as a partner. On the date of admission, the book of the firm showed a reserve fund of ₹ 50,000. Pass Journal entry to distribute the reserve fund.

Padasalai.Net

26. பங்கு என்றால் என்ன ? அதன் வகைகளை எழுதுக.

What is a share ? Mention its types.

27. நடப்புச் சொத்துகள் ₹ 8,00,000

நடப்புப் பொறுப்புகள் ₹ 4,00,000

நடப்பு விகிதத்தை கணக்கிடவும்.

Current Asset ₹ 8,00,000

Current Liabilities ₹ 4,00,000

Calculate current ratio.

28. கணக்கியல் தகவல் அமைப்பு என்றால் என்ன ?

What is Accounting Information System ?

29. கணக்கியல் அறிக்கைகள் என்றால் என்ன ?

What are accounting reports ?

30. கூட்டாண்மை அடிப்படையில் நடத்தப்படும் ஒரு வணிகத்தின் விவரங்கள் பின்வருமாறு.

(அ) ஈட்டிய இலாபம் : 2016 - ₹ 30,000.

(ஆ) 2016 -ஆம் ஆண்டின் இலாபத்தில் திரும்பத் திரும்ப நிகழா வருமானம் ₹ 3,000 சேர்ந்துள்ளது.

சரிக்கட்டப்பட்ட இலாபம் கணக்கிடுக.

The following particulars are available in respect of a business carried on by a partnership firm.

(a) Profits earned : 2016 - ₹ 30,000.

(b) Profit of 2016 includes a non-recurring income of ₹ 3,000.

Calculate profit after adjustment.

Padasalai.Net

பகுதி - III/PART - III

குறிப்பு : எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் **40** -க்கு **கட்டாயமாக** விடையளிக்கவும். **7x3=21**

Note : Answer **any seven** questions. Question No. **40** is **compulsory**.

31. நிலை அறிக்கை மற்றும் இருப்பு நிலைக் குறிப்புக்கும் இடையே உள்ள வேறுபாடுகளைத் தரவும். (ஏதேனும் மூன்று)

Differentiate between statement of affairs and balance sheet. (Any 3 points)

32. Tally.ERP 9-ல் முன்பே வரையறுக்கப்பட்ட பேரேடுகள் யாவை ?

What are the predefined ledgers available in Tally.ERP 9 ?

Padasalai.Net

33. பின்வரும் விவரங்கள் ஒரு சங்கத்தின் 2019, மார்ச் 31 -ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வருவாய் மற்றும் செலவினக் கணக்கில் எவ்வாறு தோன்றும் ?

2019 மார்ச் 31 -ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கு

ப வ

பெறுதல்கள்	₹	₹	செலுத்தல்கள்	₹
சந்தா				
2017 - 2018	5,000			
2018 - 2019	48,000			
2019 - 2020	3,000	56,000		

இச்சங்கத்தில் 300 உறுப்பினர்கள் உள்ளனர். ஒவ்வொருவரும் ஆண்டுச் சந்தாவாக ₹ 200 செலுத்துகின்றனர். இன்னும் பெறவேண்டிய 2017-2018 -ஆம் ஆண்டுக்கான சந்தா ₹ 1,000.

How the following items will appear in the Income and Expenditure Account of a club for the year ending 31st March 2019 ?

Receipts and Payments Account for the year ended 31st March 2019

Dr. **Cr.**

Receipts	₹	₹	**Payments**	₹
To Subscription				
2017 - 2018	5,000			
2018 - 2019	48,000			
2019 - 2020	3,000	56,000		

There are 300 members in the club each paying an annual subscription of ₹ 200 per annum. Subscription still outstanding for the year 2017-2018 is ₹ 1,000.

Padasalai.Net

34. மன்னன் மற்றும் இரமேஷ் எனும் கூட்டாளிகள் 3 : 1 எனும் விகிதத்தில் இலாபம் மற்றும் நட்டங்களை பகிர்ந்து வந்தனர். 2017, ஏப்ரல் 1 அன்று அவர்களுடைய முதல் : மன்னன் ₹ 80,000, இரமேஷ் ₹ 60,000 மற்றும் அவர்கள் நடப்புக் கணக்குகள் முறையே ₹ 10,000 மற்றும் ₹ 5,000 என வரவிருப்பைக் காட்டியது. 2018, மார்ச் 31 -ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய முதல் மீது வட்டி ஆண்டுக்கு 5% கணக்கிட்டு அதற்கான குறிப்பேட்டுப் பதிவுகளையும் தரவும்.

Mannan and Ramesh share profits and losses in the ratio 3 : 1. The capital on 1st April 2017 was ₹ 80,000 for Mannan and ₹ 60,000 for Ramesh and their current accounts show a credit balance of ₹ 10,000 and ₹ 5,000 respectively. Calculate interest on capital at 5% p.a. for the year ending 31st March 2018 and show the journal entries.

35. நற்பெயரைத் தீர்மானிக்கும் ஏதேனும் மூன்று காரணிகளைத் தரவும்.

State any three factors determining goodwill.

A

36. புதிய கூட்டாளி ஒருவரை சேர்ப்பதற்காக, ஒரு நிறுவனம் 4 ஆண்டுகள் சராசரி இலாபத்தில் 3 ஆண்டுகள் கொள்முதல் என்ற அடிப்படையில் கூட்டு சராசரி இலாபத்தினை பயன்படுத்தி, நற்பெயரை மதிப்பிட முடிவு செய்தது. கடந்த நான்கு ஆண்டுகளின் இலாபங்கள் மற்றும் அந்தந்த ஆண்டுகளுக்கான நிறைகள் பின்வருமாறு :

விவரம்	2015	2016	2017	2018
இலாபம் (₹)	20,000	22,000	24,000	28,000
நிறை	1	2	3	4

நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும்.

For the purpose of admitting a new partner, a firm has decided to value its goodwill at 3 years purchase of the average profit of the last 4 years using weighted average method. Profits of the past 4 years and the respective weights are as follows :

Padasalai.Net

Particulars	2015	2016	2017	2018
Profit (₹)	20,000	22,000	24,000	28,000
Weight	1	2	3	4

Compute the value of goodwill.

37. கோவிந்த் மற்றும் கோபால் இருவரும் ஒரு கூட்டாண்மை நிறுவனத்தில் 5 : 4 என்ற விகிதத்தில் இலாப நட்டத்தை பகிர்ந்து வந்தனர். அவர்கள் இரஹீம் என்பவரை கூட்டாளியாகச் சேர்த்தனர். கோவிந்த் தன் பங்கில் 2/9 பாகத்தையும், கோபால் தன் பங்கில் 1/9 பாகத்தினையும் இரஹீமிற்காக தியாகம் செய்கின்றனர். புதிய இலாபப் பகிர்வு விகிதத்தையும், தியாக விகிதத்தையும் கணக்கிடவும்.

Govind and Gopal are partners in a firm sharing profit and loss in the ratio 5 : 4. They admit Rahim as a partner. Govind surrenders 2/9 of his share in favour of Rahim. Gopal surrenders 1/9 of his share in favour of Rahim. Calculate the new profit sharing ratio and sacrificing ratio.

38. கணேஷ் என்பவரின் 31.12.2018 நாளைய விவரங்கள் பின்வருமாறு :

விவரம்	₹	விவரம்	₹
ரொக்கம்	5,000	கடனாளிகள்	16,000
சரக்கிருப்பு	18,000	கடனீந்தோர்	9,000
பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு	7,000	வங்கி ரொக்கம்	24,000
அறைகலன்	3,000	செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு	6,000
நிலம் மற்றும் கட்டடங்கள்	30,000		

2018, டிசம்பர் 31 -ஆம் நாளைய நிலை அறிக்கை தயாரித்து அந்நாளைய முதலை கணக்கிடவும்.

Following are the balances of Ganesh as on 31.12.2018.

Particulars	₹	Particulars	₹
Cash	5,000	Debtors	16,000
Stock of goods	18,000	Creditors	9,000
Bills receivable	7,000	Cash at bank	24,000
Furniture	3,000	Bills payable	6,000
Land and Buildings	30,000		

Padasalai.Net

Prepare statement of affairs as on 31st December 2018 and calculate Capital as on that date.

39. Tally.ERP 9 -ல் இலாப நட்டக்கணக்கை எவ்வாறு பார்வையிடுவது என்பதை விளக்கவும்.

Explain how to view profit and loss statement in Tally.ERP 9.

A

40. வெற்றி மற்றும் இரஞ்சித், இருவரும் கூட்டாளிகள். அவர்கள் 3 : 2 எனும் விகிதத்தில் இலாபம் பகிர்ந்து வந்தனர். அவர்களது 31.12.2017 நாளன்றைய இருப்பு நிலைக் குறிப்பு பின்வருமாறு இருந்தது.

ö£õÖ¨¦PÒ	₹	₹	ö\õzxPÒ	₹
•uÀPhUSPÒ			\µUQ¸¨¦	30,000
öÁØÔ	30,000		PhÚõÎ PÒ	10,000
Cµg]z	20,000	50,000	øPöµõUP®	35,000
Põ¨¦{v		5,000		
£Ø£»PhÜ¢÷uõº		20,000		
		75,000		75,000

01.01.2018 அன்று சூரியா என்பவர் நிறுவனத்தின் புதிய கூட்டாளியாக சேர்கிறார்.

(i) சூரியா $\frac{1}{4}$ இலாபப் பங்கிற்காக ₹ 10,000 முதல் கொண்டு வருகிறார்.

(ii) சரிக்கட்டுதலுக்கு பின் நிறுவனத்தின் மறுமதிப்பீட்டு இலாபம் ₹ 6,000.

புதிய கூட்டாளி சேர்க்கைக்குப்பின் நிறுவனத்தின் கூட்டாளிகளின் முதல் கணக்கை தயார் செய்யவும்.

Padasalai.Net

Vetri and Ranjit are partners, sharing profits in the ratio 3 : 2. Their balance sheet as on 31st December 2017 is as under.

Liabilities	₹	₹	**Assets**	₹
Capital accounts			Stock	30,000
Vetri	30,000		Debtors	10,000
Ranjit	20,000	50,000	Cash in hand	35,000
Reserve fund		5,000		
Sundry creditors		20,000		
		75,000		75,000

On 01.01.2018 they admit Suriya into their firm.

(i) Suriya brings ₹ 10,000 as capital for $\frac{1}{4}$ share of profit.

(ii) After adjustment, Revaluation profit ₹ 6,000.

Prepare Partner's Capital account after admission.

பகுதி - IV/PART - IV

குறிப்பு : **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **7x5=35**

Note : Answer **all** the questions.

41. (அ) இரட்டை பதிவு முறை மற்றும் முழுமைபெறா பதிவேடுகளுக்கும் இடையே உள்ள வேறுபாடுகள் யாவை ?

அல்லது

(ஆ) பின்வரும் தகவல்களிலிருந்து உயர் இலாபத்தினை மூலதனமாக்கல் முறையில் நற்பெயரின் மதிப்பை கணக்கிடவும்.

(i) பயன்படுத்தப்பட்ட முதல் ₹ 4,00,000.

(ii) சாதாரண இலாப விகிதம் 10%.

(iii) இலாபம் 2016 : ₹ 62,000; 2017 : ₹ 61,000, 2018 : ₹ 63,000.

Padasalai.Net

(a) State the differences between double entry system and incomplete records.

OR

(b) From the following information, compute the value of goodwill by capitalising super profit.

(i) Capital employed is ₹ 4,00,000.

(ii) Normal rate of return is 10%.

(iii) Profit for 2016 : ₹ 62,000; 2017 : ₹ 61,000 and 2018 : ₹ 63,000.

42. (அ) பூம்புகார் இலக்கிய மன்றத்தின் கீழ்க்காணும் தகவல்களிலிருந்து 2019, மார்ச் 31 -ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கினைத் தயார் செய்யவும்.

விவரம்	₹	விவரம்	₹
தொடக்க ரொக்க இருப்பு (1.4.2018)	5,000	சந்தா பெற்றது	20,000
வங்கி மேல் வரைப்பற்று (1.4.2018)	4,000	பழுது பார்த்தல் மற்றும் புதுப்பித்தல்	2,500
அச்சு மற்றும் எழுதுபொருள்	1,500	போக்குவரத்துச் செலவுகள்	2,750
வட்டி செலுத்தியது	3,250	புத்தகங்கள் வாங்கியது	10,000
முதலீடுகள் விற்றது	1,000	காப்பீட்டு முனைமம் செலுத்தியது	4,000
சிற்றுண்டி வாங்கியது	1,500	பல்வகை வரவுகள்	750
கொடுபட வேண்டிய சம்பளம்	2,000	அரசிடமிருந்து பெற்ற மானியம்	6,000
அறக்கொடை நிதி பெற்றது	2,000	சிற்றுண்டி விற்றது	1,500
ஒளியூட்டுக் கட்டணம்	1,300	கட்டடம் மீதான தேய்மானம்	2,000
		வங்கி ரொக்கம் (31.3.2019)	2,000

Padasalai.Net

அல்லது

(ஆ) அருணன் நிறுமத்தின் 31.03.2019 -ஆம் நாளைய பின்வரும் இருப்பு நிலைக் குறிப்பிலிருந்து (i) உரிமையாளர் விகிதம் மற்றும் (ii) முதல் உந்து திறன் விகிதம் கணக்கிடவும்.

அருணன் நிறுவனத்தின் 31.03.2019 -ஆம் நாளைய இருப்பு நிலைக் குறிப்பு

விவரம்		₹
I.	பங்கு மூலதனம் மற்றும் பொறுப்புகள் :	
	1. பங்குதாரர் நிதி	
	(அ) பங்கு முதல்	
	நேர்மை பங்கு முதல்	1,50,000
	8% முன்னுரிமைப் பங்கு முதல்	2,00,000
	(ஆ) காப்புகள் மற்றும் மிகுதி	1,50,000
	2. நீண்ட காலப் பொறுப்புகள்	
	நீண்ட காலக் கடன்கள் (9% கடனீட்டுப் பத்திரங்கள்)	4,00,000
	3. நடப்பு பொறுப்புகள்	
	(அ) வங்கியிலிருந்து பெற்ற குறுகிய காலக் கடன்கள்	25,000
	(ஆ) கணக்குகள் மூலம் செலுத்த வேண்டியவைகள்	75,000
	மொத்தம்	10,00,000
II.	சொத்துக்கள் :	
	1. நீண்ட கால சொத்துக்கள்	
	நிலைச் சொத்துகள்	7,50,000
	2. நடப்புச் சொத்துகள்	
	(அ) சரக்கிருப்பு	1,20,000
	(ஆ) கணக்குகள் மூலம் பெற வேண்டியவைகள்	1,00,000
	(இ) ரொக்கம் மற்றும் ரொக்கத்திற்கு சமமானவைகள்	27,500
	(ஈ) இதர நடப்புச் சொத்துகள் செலவுகள் முன்கூட்டிச் செலுத்தியது	2,500
	மொத்தம்	10,00,000

Padasalai.Net

(a) From the following particulars of Poompuhar Literary Association, prepare Receipts and Payments account for the year ended 31st March, 2019.

Particulars	₹	Particulars	₹
Opening Cash in hand as on 01.04.2018	5,000	Subscription received	20,000
Bank overdraft as on 01.04.2018	4,000	Repairs and renewals	2,500
Printing & Stationery	1,500	Conveyance Paid	2,750
Interest Paid	3,250	Books Purchased	10,000
Sale of Investments	1,000	Insurance Premium Paid	4,000
Purchase of refreshment	1,500	Sundry receipts	750
Outstanding salary	2,000	Government grants received	6,000
Endowment fund receipts	2,000	Sale of refreshments	1,500
Lighting charges	1,300	Depreciation on buildings	2,000
		Cash at bank on 31.03.2019	2,000

Padasalai.Net

OR

(b) From the following Balance Sheet of Arunan Ltd. as on 31.03.2019, calculate (i) Proprietary Ratio (ii) Capital Gearing Ratio.

Balance Sheet of Arunan Ltd. as on 31.03.2019

Particulars			₹
I.	Equity and Liabilities :		
	1. Shareholder's Funds		
		(a) Share Capital	
		Equity Share Capital	1,50,000
		8% Preference Share Capital	2,00,000
		(b) Reserves and surplus	1,50,000
	2. Non-current liabilities		
		Long-term borrowings (9% Debentures)	4,00,000
	3. Current liabilities		
		(a) Short-term borrowings from banks	25,000
		(b) Trade payables	75,000
		Total	10,00,000
II.	Assets :		
	1. Non-current assets		
		Fixed assets	7,50,000
	2. Current assets		
		(a) Inventories	1,20,000
		(b) Trade receivables	1,00,000
		(c) Cash & Cash equivalents	27,500
		(d) Other current assets	
		Expenses paid in advance	2,500
		Total	10,00,000

Padasalai.Net

43. (அ) பின்வரும் விவரங்களிலிருந்து அப்துல் வரையறு நிறுமத்தின் ஒப்பீட்டு வருமான அறிக்கையை தயார் செய்யவும்.

Â Á µ®	2015-16 (₹)	2016-17 (₹)
Â Ø£ø Ú %»® ö£ØÓ Á¸ Áõ´	3,00,000	3,60,000
Cuµ Á¸ ©õÚ®	1,00,000	60,000
ö\» ÄPÒ	2,00,000	1,80,000
Á¸ ©õÚ Á›	30%	30%

Padasalai.Net

அல்லது

(ஆ) முரளி மற்றும் சேது இருவரும் ஒரு கூட்டாண்மை நிறுவனத்தின் கூட்டாளிகள். முரளி கழிவுக்கு முன் உள்ள நிகர இலாபத்தில் 10% கழிவாக பெற வேண்டும். சேது கழிவுக்கு பின் உள்ள நிகர இலாபத்தில் 10% கழிவாகப் பெற வேண்டும். 2019, மார்ச் 31 -ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய கழிவு கணக்கிடுவதற்கு முன்னர் உள்ள நிகர இலாபம் ₹ 1,10,000. முரளி மற்றும் சேதுவிற்கு தர வேண்டிய கழிவினைக் கணக்கிடவும்.

(a) From the following particulars, prepare comparative income statement of Abdul Co. Ltd.

Particulars	2015-16 (₹)	2016-17 (₹)
Revenue From Operations	3,00,000	3,60,000
Other income	1,00,000	60,000
Expenses	2,00,000	1,80,000
Income Tax	30%	30%

OR

(b) Murali and Sethu are partners in a firm. Murali is to get a commission of 10% of net profit before charging any commission. Sethu is to get a commission of 10% on net profit after charging all commission. Net profit for the year ended 31st March 2019 before charging any commission was ₹ 1,10,000. Find the amount of commission due to Murali and Sethu.

Padasalai.Net

44. (அ) சுந்தர் மற்றும் சுரேஷ் என்னும் கூட்டாளிகள் 3 : 2 என்னும் விகிதத்தில் இலாபம் பகிர்ந்து வந்தனர். 2017, ஜனவரி 1 -ல் அவர்களின் இருப்பு நிலைக் குறிப்பு பின் வருமாறு :

பொறுப்புகள்	₹	₹	சொத்துகள்	₹
முதல் கணக்குகள்			கட்டடம்	25,000
சுந்தர்	30,000		அறைகலன்	13,000
சுரேஷ்	20,000	50,000	சரக்கிருப்பு	25,000
கடனீந்தோர்		50,000	கடனாளிகள்	15,000
பொதுக்காப்பு		10,000	பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு	14,000
			வங்கி	18,000
		1,10,000		1,10,000

A

அவர்கள் சுகுமார் என்பவரை $\frac{1}{4}$ இலாபப் பங்கிற்கு பின்வரும் விவரங்கள் அடிப்படையில் கூட்டாளியாக சேர்த்தனர்.

(i) சுகுமார் ₹ 30,000 முதலாக கொண்டு வருகிறார்.

(ii) மறுமதீப்பீடு நட்டம் ₹ 15,000.

(iii) சரக்கிருப்பு ₹ 20,000 என மதிப்பிடப்பட்டது.

(iv) அறைகலன் மீது ₹ 2,000 தேய்மானம் நீக்கப்பட்டது.

(v) கட்டடம் மீது 20% தேய்மானம் நீக்கப்பட்டது.

புதிய கூட்டாளி சேர்க்கைக்கு பின் உள்ள கூட்டாளிகளின் முதல் கணக்கு மற்றும் இருப்பு நிலைக்குறிப்பு தயார் செய்யவும்.

அல்லது

(ஆ) பின்வரும் விவரங்களிலிருந்து மொத்தக் கொள்முதலைக் கணக்கிடவும்.

Padasalai.Net

விவரம்	₹
2017, ஏப்ரல் 1 அன்று பற்பல கடனீந்தோர்	75,000
2017, ஏப்ரல் 1 அன்று செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு	60,000
கடனீந்தோருக்குச் செலுத்திய ரொக்கம்	3,70,000
செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டுக்கு செலுத்தியது	1,00,000
கொள்முதல் திருப்பம்	15,000
ரொக்கக் கொள்முதல்	3,20,000
2018, மார்ச் 31 அன்று கடனீந்தோர்	50,000
2018, மார்ச் 31 அன்று செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு	80,000

(a) Sundar and Suresh are partners sharing profits in the ratio of 3 : 2. Their balance sheet as on 1st January, 2017 was as follows :

Liabilities	₹	₹	Assets	₹
Capital accounts :			Buildings	25,000
Sundar	30,000		Furniture	13,000
Suresh	20,000	50,000	Stock	25,000
Creditors		50,000	Debtors	15,000
General Reserve		10,000	Bills Receivable	14,000
			Bank	18,000
		1,10,000		1,10,000

They decide to admit Sugumar into partnership for $\frac{1}{4}$ share in the profits on the following terms :

(i) Sugumar has to bring in ₹ 30,000 as Capital.

(ii) Revaluation loss ₹ 15,000.

(iii) That the stock be valued at ₹ 20,000.

(iv) That the Furniture be depreciated by ₹ 2,000.

(v) That the value of building be depreciated by 20%.

Prepare Capital A/c's & Balance Sheet after admission.

Padasalai.Net

OR

(b) From the following particulars calculate Total Purchases.

Particulars	₹
Sundry creditors on 01.04.2017	75,000
Bills Payable on 01.04.2017	60,000
Paid cash to creditors	3,70,000
Paid for Bills Payable	1,00,000
Purchases Returns	15,000
Cash Purchases	3,20,000
Creditors on 31st March 2018	50,000
Bills Payable on 31st March 2018	80,000

45. (அ) கீழ்க்காணும் திருச்சி மனமகிழ் மன்றத்தின் பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கிலிருந்து 2018, மார்ச் 31 -ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வருவாய் மற்றும் செலவினக் கணக்கினைத் தயாரிக்கவும்.

பெறுதல்கள்	₹	செலுத்தல்கள்	₹
தொடக்க இருப்பு கைரொக்கம்	11,000	அறைகலன் வாங்கியது	10,000
பங்காதாயம் பெற்றது	27,600	வாடகை	2,800
பழைய செய்தித்தாள் விற்றது	3,000	செயலர் மதிப்பூதியம்	15,000
உறுப்பினர் சந்தா	31,000	தபால் செலவுகள்	1,700
பாதுகாப்பு பெட்டக வாடகை	8,000	பொதுச் செலவுகள்	4,350
முதலீடுகள் மீதான வட்டி	1,250	அச்சு மற்றும் எழுதுபொருள்கள்	45,000
அறைகலன் விற்றது	5,000	தணிக்கை கட்டணம்	5,000
(ஏட்டு மதிப்பு ₹ 4,400)		இறுதி இருப்பு கைரொக்கம்	3,000
	86,850		86,850

Padasalai.Net

அல்லது

(ஆ) சந்துரு, விஷால் மற்றும் ரமணன் என்ற கூட்டாளிகள் ஒரு கூட்டாண்மை நிறுவனத்தின் இலாபம் மற்றும் நட்டங்களை சமமாகப் பகிர்ந்து வந்தனர். 2018, மார்ச் 31 -ஆம் நாளைய இருப்பு நிலைக் குறிப்பு பின்வருமாறு :

ö£õÖ¨¦ PÒ	₹	₹	ö\õzx PÒ	₹	₹
• uÀ Pn US PÒ			A ø ÓP» ß		60,000
\¢x ¸	60,000		C¯ ¢v µ®		1,20,000
Â å õÀ	70,000		£Ø£» PhÚõÎ PÒ	33,000	
µ©n ß	70,000	2,00,000	PÈ UP : I ¯ UPhß J x US	3,000	30,000
ö\¾zuØS›¯ ©õØÖa^mk		80,000	ö£ÖuØS›¯ ©õØÖa^mk		50,000
			Á[Q öµõUP®		20,000
		2,80,000			2,80,000

Padasalai.Net

ரமணன் கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு 2019, மார்ச் 31 அன்று கூட்டாண்மையிலிருந்து விலகினார்.

(i) இயந்திரம் ₹ 1,50,000 என மதிப்பிடப்பட்டது.

(ii) அறைகலன் மதிப்பில் ₹ 10,000 குறைக்கப்பட்டது.

(iii) ஐயக்கடன் ஒதுக்கு ₹ 5,000 -ஆக அதிகரிக்கப்பட வேண்டும்.

(iv) ஏடுகளில் பதியப் பெறாத முதலீடுகள் ₹ 30,000 தற்போது பதியப்பட வேண்டும்.

தேவையான குறிப்பேட்டுப் பதிவுகள் தந்து மறுமதிப்பீட்டுக் கணக்கு தயார் செய்யவும்.

A

(a) From the following Receipts and Payment Account of Trichy Recreation Club, prepare Income and Expenditure Account for the year ended 31.03.2018.

Receipts	₹	Payments	₹
To Opening balance Cash in hand	11,000	By Furniture purchased	10,000
To Dividend received	27,600	By Rent	2,800
To Sale of old Newspaper	3,000	By Secretary's honorarium	15,000
To members Subscription	31,000	By Postage	1,700
To Locker rent	8,000	By General Expenses	4,350
To Interest on investments	1,250	By Printing & Stationery	45,000
To Sale of Furniture	5,000	By Audit Fees	5,000
(Book value ₹ 4,400)		By Closing balance Cash in hand	3,000
	86,850		86,850

Padasalai.Net

OR

(b) Chandru, Vishal and Ramanan are partners in a firm sharing profits and losses equally. Their balance sheet as on 31st March, 2018 is as follows :

Liabilities	₹	₹	**Assets**	₹	₹
Capital accounts :			Furniture		60,000
Chandru	60,000		Machinery		1,20,000
Vishal	70,000		Sundry debtors	33,000	
Ramanan	70,000	2,00,000	(–) Provision for doubtful debts	3,000	30,000
Bills Payable		80,000	Bills Receivable		50,000
			Cash at Bank		20,000
		2,80,000			2,80,000

Ramanan retired on 31st March 2019 subject to the following conditions :
(i) Machinery is valued at ₹ 1,50,000.
(ii) Value of Furniture broughtdown by ₹ 10,000.
(iii) Provision for doubtful debts should be increased to ₹ 5,000.
(iv) Investment of ₹ 30,000 not recorded in the books is to be recorded now.

Prepare Revaluation Account and Pass Journal entries.

Padasalai.Net

46. (அ) பின்வரும் விவரங்களிலிருந்து மணி மற்றும் கனி நிறுமங்களின் 2019, மார்ச் 31 -ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டிற்கான பொது அளவு வருமான அறிக்கையைத் தயார் செய்வும்.

விவரம்	மணி நிறுமம் ₹	கனி நிறுமம் ₹
விற்பனை மூலம் பெற்ற வருவாய்	2,00,000	2,50,000
இதர வருமானம்	30,000	25,000
செலவு	1,10,000	1,25,000

அல்லது

(ஆ) தியாக விகிதத்திற்கும் ஆதாய விகிதத்திற்கும் இடையே உள்ள வேறுபாடுகள் யாவை ?

A

(a) From the following particulars of Mani Ltd. and Kani Ltd., prepare a common size Income Statement for the year ended 31st March 2019.

Particulars	Mani Ltd. ₹	Kani Ltd. ₹
Revenue from operation	2,00,000	2,50,000
Other Income	30,000	25,000
Expenses	1,10,000	1,25,000

OR

(b) Distinguish between sacrificing ratio and gaining ratio.

47. (அ) பாபு நிறுமத்தின் 2018, மார்ச் 31 -ஆம் நாளைய இருப்பு நிலைக் குறிப்பு (வருவிய) பின்வருமாறு :

விவரம்	தொகை ₹
பங்கு மூலதனம் மற்றும் பொறுப்புகள்	
1. பங்குதாரர் நிதி	
(அ) பங்கு முதல்	35,000
(ஆ) காப்புகள் மற்றும் மிகுதி	12,500
2. நீண்டகாலப் பொறுப்புகள்	
நீண்டகாலக் கடன்கள்	15,000
3. நடப்பு பொறுப்புகள்	
(அ) கணக்குகள் மூலம் செலுத்த வேண்டியவைகள்	10,000
(ஆ) இதர நடப்பு பொறுப்புகள்	7,500
(இ) குறுகிய கால ஒதுக்குகள்	21,000
மொத்தம்	1,01,000

Padasalai.Net

அவ்வாண்டில் வட்டி மற்றும் வரிக்கு முன்னர் இலாபம் ₹ 25,000. அவ்வாண்டின் முதலீடு மீதான வருவாய் கணக்கிடவும்.

அல்லது

(ஆ) பின்வரும் நடவடிக்கைகளை Tally -யில் பதிவு செய்யவும்.

(1) ராபர்ட் ₹ 1,00,000 முதலுடன் போக்குவரத்து தொழில் தொடங்கினார்.

(2) பாரத் ஸ்டேட் வங்கியில் கணக்கு துவங்கப்பட்டு ₹ 30,000 வைப்பு வைக்கப்பட்டது.

(3) ரொக்கத்திற்கு அறைகலன் வாங்கியது ₹ 10,000.

(4) மொகைதீனிடமிருந்து கடனுக்கு சரக்கு வாங்கியது ₹ 20,000.

(5) ரொக்கத்திற்கு சரக்கு வாங்கியது ₹ 8,000.

(a) Following is the extract of the balance sheet of Babu Ltd., as on 31st March, 2018 :

Particulars		Amount ₹
	Equity and Liabilities :	
1.	Shareholder's Funds	
	(a) Share Capital	35,000
	(b) Reserve and surplus	12,500
2.	Non-current liabilities	
	Long-term borrowings	15,000
3.	Current liabilities	
	(a) Trade payables	10,000
	(b) Other current liabilities	7,500
	(c) Short-term provisions	21,000
	Total	1,01,000

Net profit before Interest and Tax for the year was ₹ 25,000. Calculate the return on Capital employed for the year.

OR

Padasalai.Net

(b) Record the following transactions in Tally.

(1) Robert commenced a transport business with a Capital of ₹ 1,00,000.

(2) An account was opened with a State Bank of India and deposited ₹ 30,000.

(3) Purchased Furniture by paying cash ₹ 10,000.

(4) Goods purchased on credit from Mohaideen for ₹ 20,000.

(5) Cash sales made for ₹ 8,000.

- o O o -